குருவைத் திருத்திய மாணவர் இவர்.அதனால் பக்த விஜயத்தின் இலக்கணம் மாறி இவரது குருவை ப்ரதானமாக அறிமுகம் செய்வதைவிட இவரை அடியாராய்ச் சேர்க்கிறோம்.

நாம் அனைவருமே பல யுகங்களுக்கு முன் பல உயிர்களாய்ப் பிறந்து படிப்படியாய் விழிப்புணர்வாகிய பரிணாமம் பெற்று உயர்ந்த மானுட ஜென்மத்தை அடைகிறோம்.ஆனால் மனிதப்பிறவி ஏன் எடுத்தோம் என்பது புரியாமல் வீணாக்குகிறோம்.

பல யுகங்களுக்கு முன் கங்கையில் ஒரு மீன் சதா காசி விஸ்வநாதரின் கோயில் கேட்கும் பஞ்சாட்சர மந்த்ரத்தை க்ரஹித்து விழிப்புணர்வு பெற்று தானும் மனிதனாகி ஈஸ்வர பக்தியிலும் சேவையிலும் ஈடுபட முயற்சி செய்து தன் அளவில் மிக்க பக்தியுடன் வாழ்ந்தது.அதன் பலனாகக் காசி மஹாபுரியில் மனிதப்பிறவையை எடுத்தது.

**சித்தரான அடியார்**

பெற்றோர் குழந்தைக்கு வைத்த பெயர் மச்சேந்த்ரியநாத்.மிகவும் ஸ்ரத்தையுடன் ஆன்மீக வாழ்க்கையில் ஈடுபட்டு அஷ்டமா சித்திகள் கைவரப் பெற்ற ஒரு சித்தராக இவர் மாறினார்.காசியிலேயே வாழ்ந்தார்.இவரது சித்துக்கள் மிகவும் ப்ரசித்தம்.பலர் இவரை விஸ்வநாதராகவே பூஜிப்பதும் வழக்கம்!

இவரது ஆத்மார்த்த மாணவர் தான் கோரக்கர்.மிகவும் ஆழ்ந்த பக்தியும் குரு பாத சேவையும் செய்து வாழ்ந்து அவரும் அதன் மூலம் சித்தர் ஆனார்.

**அன்ன தானம் புகட்டிய பாடம்**

காசியில் ஒரு வீட்டில் தம்பதிகள் அன்னதானம் செய்தனர்.அதைக் கொண்டு வரும்படி குரு கேட்க, கோரக்கரும் அன்னதானம் பெற்றுக் கொண்டு வந்து அளித்தார்.அற்புதமான அறுசுவை அன்னம் அது.மறுநாளும் அவரை குரு அவ்வீட்டிற்குச் சென்று அறுசுவை விருந்து சமைத்துப் பெற்று வரும்படி வேண்டினார்.அப்போதே தன் குரு எங்கோ இடறுவதை கோரக்கர் புரிந்து கொண்டு விட்டார் எனலாம்.

**கண்ணைக் கேட்ட குரு**

அவ்வீட்டு அம்மை, ”குரு கேட்டார் என்று இப்படி தினமும் விருந்து கேட்டால் என்ன செய்வது.உம் குரு என்ன கேட்டாலும் தருவீரோ?”

கோரக்கர், ”உண்மை அம்மா! எதைக் கேட்டாலும் தருவதே எம் சேவை!”

அவ்விடம் வந்த மச்சேந்த்ரியர், ”அடேய்! உன் கண்ணைக் கொடு” என்றாரே பார்க்கலாம்,யாவரும் காண ஒரு கத்தி எடுத்து கண்களைப் பிடுங்க முற்பட்டார்.அப்போது குரு இவரைத் தடுத்து ஆசீர்வதித்தார்.மக்கள் இவரது மேன்மை மிகு குரு பக்தியைக் கண்டு போற்றினர்.

**பெண் ஆசையில் சிக்கிய குரு**

காலம் செல்லச் செல்ல இவரது குரு வேறு தேசம் ஒன்றிற்கு ஸ்தல யாத்திரை சென்ற போது அழகிய ராணி ஒருத்தியை மணந்து கொண்டு விடுகிறார்.இதன் மூலம் அவரது ஆஸ்ரமத்திலும் அன்பர்கள் மத்தியிலும் மிகக்குழப்பம் உண்டானது.

ராணியும் இவரும் காமத்தின் பிடியில் சிக்கி உழன்றனர்.சதா இவர் தன் வயதையும் மறந்து தன் சித்து சக்திகளைப் படுக்கை அறை இச்சைக்கே செலவிடுகிறார்.இதை உணர்ந்த கோரக்கர் எப்படியும் இவரை அவள் பிடியில் இருந்து மீட்க சங்கல்பம் செய்தார்.

இவரது காம சுகத்தை அனுபவித்த அப்பெண் அரசி எங்கே இவர் தன்னை விட்டுச் சென்று விடுவாரோ என்ற சந்தேகத்தில் தன் தேசத்துள் இருக்கும் சாது ஜனங்களை விரட்டினாள்.

**பெண் ஆசை பொன் ஆசையானது**

மாறு வேஷத்தில் அரண்மனைக்குள் சென்று தனிமையில் தன் குருவிற்கு அவரது சக்தி விரயம் ஆகி அவரது உயர் பிறவியின் லட்சியமே வீணாவதைப் பக்குவமாக எடுத்துச் சொல்ல மீண்டும் குருதேவர் துறவியாக மாறினார்.யாருக்கும் தெரியாமல் இருவரும் ராத்திரியில் தேசத்தை விட்டு வெளியேறுகையில் அவர் ஒரு பை முழுவதும் பொற்காசுகள் எடுத்து வர, கோரக்கர் அதைப் பிடுங்கி கங்கைக்குள் வீசினார்.

மீண்டும் வாரணாசியில் ஆஸ்ரமத்தை ஏற்படுத்தி இருவரும் உண்மையான ஆன்மீகத்தைக் கைக்கொண்டனர்.அதன் பின் பூரண விழிப்புணர்வில் ஸ்ரீராம நாம ஜெபத்தை மேற்கொண்டு தன் சித்திகளைக் கைவரப் பெற்றார் மச்சேந்த்ரியர்.குருவும் சிஷ்யனும் மிகவும் போற்று அளவுக்கு வாழ்ந்தனர்.இவரால்

விடப்பட்ட அரசியும் புத்தி மாறி இவரைத் தன் மானசீக தெய்வமாய் குருவாய் ஏற்றுக் கொண்டு தன் தேசத்தில் ஆன்மீகத்தை வளர்த்தாளாம்.

**இவர்களது பரம்பரைக் காண்க:**
மச்சேந்த்ரியர் - கோரக்கர் - சாம்பவர் - அத்வயர் - ப்ரபாவர் - கைநிகர் - நிவாத்தி - ஞான தேவர் - ஜனாபாய்

ஹரி ஓம்!